**ஜூன் – 25**


# TNPSC துளிகள்

- ஏழு கண்டங்களிலும் உள்ள மிக உயர்ந்த சிகரங்களில் ஏறிய முதல் தமிழக நபர் என்ற பெருமையினை N. முத்தமிழ் செல்வி பெற்றுள்ளார்.
- சென்னையின் லயோலா கல்லூரியில் முனைவர் பட்டம் பெற்று உதவிப் பேராசிரியர் பதவியைப் பெற்ற தமிழ்நாட்டின் முதல் திருநங்கை பெண் N. ஜென்சி ஆவார்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, 2025-26 ஆம் நிதியாண்டிலிருந்து, சிறு கடன் நிதியியல் வங்கிகளுக்கான ஒட்டு மொத்த முன்னுரிமைத் துறை கடன் வழங்கீட்டினை மொத்தக் கடனில் 75 சதவீதத்திலிருந்து 60% ஆகக் குறைத்துள்ளது.
- அமெரிக்காவின் டெக்சாஸில் அடிமைப்படுத்தப்பட்ட கறுப்பின மக்களை நினைவு கூரும் வகையில் ஜூன் 19 ஆம் தேதியன்று கருப்புச் சுதந்திர தினம் அல்லது ஜூன்டீன் தேசிய சுதந்திர தினம் அனுசரிக்கப் படுவதோடு, அவர்கள் இறுதியாக 1865ம் ஆண்டில் சுதந்திரம் பெற்றதை அந்த நாடு கண்டது.
- அமெரிக்கா மிட்நைட் ஹேமர் எனும் ஓர் நடவடிக்கையினைத் தொடங்கி, ரேடாருக்குப் புலப்படாத வகை குண்டுவீச்சு விமானங்கள் மற்றும் டோமாஹாக் எறிகணைகளைப் பயன்படுத்தி ஈரானின் முக்கிய அணுசக்தி தளங்களான ஃபோர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்பஹானைத் தாக்கியது.
- ஜூன் 21 ஆம் தேதியன்று கொண்டாடப்படும் உலக இசை தினமானது, உலகளாவியச் சுதந்திரமான பொது நிகழ்ச்சிகள் மூலம் கலாச்சார ஒற்றுமை மற்றும் மிகுந்த ஒரு உள்ளடக்கத்தை ஊக்குவிக்கிறது.
    - 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Healing Through Harmony" என்பது ஆகும்.
- ஆண்டுதோறும் ஜூன் 22 ஆம் தேதியன்று கொண்டாடப்படும் உலக மழைக்காடுகள் தினமானது, மழைக் காடுகளின் ஒரு முக்கியத்துவம் குறித்தப் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
    - 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Forests and Foods" என்பதாகும்.
- நிதியமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் நாணயவியல் ஆய்வாளர் ஆறுமுக சீதா ராமன் ஆகியோர் இணைந்துஎழுதிய வரலாறு கூறும் தமிழ்நாட்டுக் காசுகள் (தமிழக வரலாற்றைப் பற்றிப் பேசும் நாணயங்கள்) என்ற புத்தகத்தின் இரண்டு தொகுதிகளைத் தமிழக முதல்வர் வெளியிட்டுள்ளார்.
- எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணனுக்கு அவரது ஒற்றைச் சிறகு ஓவியா என்ற சிறார்கள் புதின நூலிற்காக வேண்டி தமிழ் மொழிப் பிரிவில், 2025 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமியின் பால சாகித்ய புரஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது.
- கூத்தொன்று கூடிற்று என்ற ஒரு சிறுகதைக்காக என எழுத்தாளர் லட்சுமிஹருக்கு தமிழ் மொழிப் பிரிவில், 2025 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமியின் யுவ புரஸ்கார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- அருணாச்சலப் பிரதேசம் 58000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக 2025-2035 வரையிலான காலக்கட்டத்தினை 'நீர் மின்னாற்றலுக்கான பத்தாண்டு' என்பதாக அறிவித்துள்ளது.
- மத்திய அரசானது 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தமிழ்நாட்டில் ஏற்கனவே அங்கீகரிக்கப் பட்டுள்ள இரண்டு மின்னணு பொருட்கள் உற்பத்தித் தொகுதிகளையும் சேர்த்து, மூன்றாவது மின்னணுப் பொருட்கள் உற்பத்தித் தொகுதியையும் அமைக்கச் செய்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- உலக சுகாதார சபையானது, சிரங்கு உள்ளிட்ட சில தோல் சம்பந்தப்பட்ட நோய்களை உலகளாவியப் பொது சுகாதார முன்னுரிமை நோய்களாக அதிகாரப் பூர்வமாக ஒரு மனதாக அங்கீகரித்துள்ளது.
- இந்தோனேசியாவின் புளோரஸ் தீவில் அமைந்துள்ள மௌண்ட் லெவோடோபி லக்கி-லக்கி எரிமலை சமீபத்தில் வெடித்தது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 04 ஆம் தேதியினை ஒருதலைப் பட்சமான வற்புறுத்தல் நடவடிக்கைகளுக்கு எதிரான சர்வதேச தினமாக அறிவிக்கும் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது.
- ஜூன் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமையன்று அனுசரிக்கப்படும் உலக ஜின் (மது வகை) தினம் ஆனது 2025 ஆம் ஆண்டில் ஜூன் 14 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- வெறுப்பு, பாகுபாடு, இனவெறி மற்றும் சமத்துவமின்மை போன்றவற்றை எதிர்த்துப் போராடுவதற்காக ஜூன் 18 ஆம் தேதியன்று வெறுப்பினை உண்டாக்கும் பேச்சினைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Hate Speech and Artificial Intelligence Nexus: Building coalitions to reclaim inclusive and secure environments free of hatred" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களின் சிறப்பம்சங்கள்




| ROADS | WIDENING | CULVERTS/BRIDGES |
|---|---|---|
| State highways | 469.13km | 11 |
| Major district roads | 805.14km | 9 |
| Other district roads | 1,599.22km | 35 |
| ODR special component plan | 383.08km | 1 |

- முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 448 கிலோ மீட்டர் நீளமுள்ள நான்கு வழிச் சாலைகளுக்கு 3,858 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- அதே திட்டத்தின் கீழ் சுமார் 1,681 கிலோ மீட்டர் நீளமுள்ள இரு வழிச் சாலைகளுக்கு 2,207 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- விரிவான சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 9,620 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைத் திட்டங்களுக்கு மொத்தம் 17,154 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டம் ஆனது 2021 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.


# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சரிபார்ப்பதற்கான SOP

- இந்திய தேர்தல் ஆணையம் (ECI) ஆனது, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை

(EVM) சரிபார்ப்பதற்கான அதன் முக்கியச் சீர்தரச் செயல்பாட்டு நடைமுறையினைப் (SOP) புதுப்பித்துள்ளது.

- இதில் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தைப் பிடித்த வேட்பாளர்கள் EVM மீதான சரி பார்ப்புகளைக் கோர அனுமதிக்கும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து இந்தப் புதுப்பிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- திருத்தப்பட்ட SOP ஆனது, வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதையும் தேர்தலின் நேர்மை தன்மையினை நிலை நிறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வேட்பாளர்கள் தற்போது தேர்தலில் பயன்படுத்தப்படும் EVM இயந்திரங்களில் சுமார் 5% வரையிலான சரிபார்ப்பைக் கோரலாம்.
- இந்தச் செயல்முறையில் ஒரு இயந்திரத்திற்கு 1,400 வாக்குகள் வரையிலான மாதிரி வாக்கெடுப்பு அடங்கும்.
- EVM முடிவுகள் VVPAT சீட்டுகளுடன் பொருந்தினால், இயந்திரம் சரிபார்க்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.




# சர்வதேசச் செய்திகள்

## இஸ்ரேலின் சாம்சன் விருப்பத் தேர்வு

- இஸ்ரேலின் "கடைசி முயற்சிச் சூழல்" ஆனது சில நேரங்களில் "சாம்சன் விருப்பத் தேர்வு" என்று குறிப்பிடப்படுகிறது.
- இந்தச் சொற்றொடர் ஆனது 1960 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் இஸ்ரேலியத் தலைவர்களால் உருவாக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.
- இஸ்ரேல் அதன் அதிகார இருப்பிற்கு ஏதேனும் அச்சுறுத்தலை எதிர்கொண்டால் அணு சக்தி சார்ந்த பதில் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதே இந்தக் கொள்கையாகும்.
- ஒரு கோட்பாட்டளவில், இஸ்ரேல் அணுசக்தி பெறாத நாட்டிடமிருந்து கூட அதிகார இருப்பிற்கான அச்சுறுத்தலாக கருதும் ஒரு இராணுவத் தோல்வியை எதிர்கொண்டால் சாம்சன் விருப்பத் தேர்வு பொருந்தும்.
- இஸ்ரேல் அமெரிக்கா தயாரித்த F-15, F-16 மற்றும் F-35 விமானங்களை கொண்டுள்ளது என்பதோடு இவை அனைத்தும் அணு குண்டுகளை இயக்கும் விமானங்களாக மாற்றி அமைக்கக் கூடியவை ஆகும்.

- இஸ்ரேல் 750 முதல் 1,110 கிலோ வரை புளூட்டோனியத்தைக் கொண்டுள்ளது என்ற ஒரு நிலையில் இது சுமார் 187 முதல் 277 அணு ஆயுதங்களை உருவாக்கப் போதுமானதாக இருக்கும்.




## ஒட்டாவா ஒப்பந்தம் – பின்லாந்து




- எஸ்டோனியா, லிதுவேனியா, லாட்வியா மற்றும் போலந்து ஆகியவற்றிற்குப் பிறகு ஒட்டாவா கண்ணிவெடி தடுப்பு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறும் 5வது ஐரோப்பிய நாடாக பின்லாந்து மாறுகிறது.
- பின்லாந்து நாடானது 2012 ஆம் ஆண்டில் ஒட்டாவா ஒப்பந்தத்தில் இணைந்தது.
- இந்த ஒட்டாவா ஒப்பந்தம் ஆனது, 1997 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்டு 1999 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- மனிதர்களுக்கு எதிரான கண்ணிவெடிகள் தடை உடன்படிக்கை (ஒட்டாவா ஒப்பந்தம்) ஆனது, மனிதர்களுக்கு எதிரான கண்ணிவெடிகளின் பயன்பாடு, இருப்பு, உற்பத்தி

மற்றும் பரிமாற்றத்தைத் தடை செய்கிறது.

- தற்போது இது 164 ஒப்பந்த தார நாடுகளைக் கொண்டுள்ளது.

### ரேடாருக்குப் புலப்படாத குண்டுவீச்சு விமானம் B-2 ஸ்பிரிட்

- அமெரிக்க விமானப்படையானது, ஈரானின் அணுசக்தித் தளங்களில் துல்லியமான தாக்குதல்களை மேற்கொள்வதற்காக B-2 ஸ்பிரிட் எனப்படும் ரேடாருக்குப் புலப்படாத குண்டுவீச்சு விமானங்களை நிலைநிறுத்தியுள்ளது.
- இந்த நடவடிக்கையானது, மிகப் பெரிதும் பலப்படுத்தப்பட்ட ஃபோர்டோ யுரேனிய வள இருப்பு மையம் உட்பட மூன்று இடங்களை குறி வைத்தது.
- ஃபோர்டோ ஈரானின் அணுசக்தித் திட்டத்தின் "கிரீடம்" என்று அழைக்கப்பட்டது.
- B-2 ஆனது எரிபொருள் நிரப்பாமல் 6,000 கடல் மைல்களுக்கும் (11,000 கிலோ மீட்டர்) அதிகமான தூரத்திற்குச் செயல்படும் ஒரு திறனைக் கொண்டுள்ளது என்பதோடு இது அமெரிக்காவிலிருந்து நீண்ட தூர தாக்குதல்களை மேற்கொள்ள அனுமதிக்கிறது.
- இது 40,000 பவுண்டுகளுக்கும் (18,144 கிலோ) அதிகமான சுமையைச் சுமந்து செல்லும் திறன் கொண்டது.
- இதில் வழக்கமான மற்றும் அணு ஆயுதங்கள் ஆகிய இரண்டும் அடங்கும்.
- அமெரிக்காவின் அணுசக்தி ஆயுத மும்மை அமைப்பின் ஒரு பகுதியாக B-2 ஆனது 16 B83 அணு குண்டுகளை ஏவக் கூடியது.





## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### சூரிய சக்தியால் இயங்கும் இந்தியாவின் புதிய சாதனம்

- பெங்களூருவில் உள்ள நுண் மற்றும் மென் ரக பொருள் அறிவியல் மையத்தின் (CeNS) அறிவியலாளர்கள் அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான பசுமை ஹைட்ரஜன் சார்ந்த சாதனத்தை உருவாக்கியுள்ளனர்.
- இது சூரிய சக்தி மற்றும் பூமியில் நிறைந்து காணப்படும் சில பொருட்களை மட்டுமே பயன்படுத்தி நீர் மூலக்கூறுகளைப் பிரிக்கிறது.
- இந்தச் செயல்முறையானது புதைபடிவ எரிபொருள்கள் மற்றும் மிக விலையுயர்ந்த

வளங்கள் இல்லாதது.

- இதுவரை அறியப்பட்ட தூய்மையான எரிபொருட்களில் ஒன்றான பசுமை ஹைட்ரஜன் ஆனது, தொழிற்சாலைகளை கார்பன் நீக்கம் செய்யவும், வாகனங்களுக்கு ஆற்றல் அளிக்கவும் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலைச் சேமிக்கும் திறனும் கொண்டது.




## குவாண்டம் 5G FWA

- BSNL நிறுவனமானது, ஐதராபாத்தில் குவாண்டம் 5G என்ற நிலையான கம்பி வடம் சாராத இணைப்பு அணுகலை (FWA) பெருமளவு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களுக்குப் பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது இந்தியாவின் முதல் முழுமையாக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, SIM எதுவும் இல்லாத 5G FWA சேவையாகும் என்பதோடு இது 5G ரேடியோ வழியாக கம்பிவடம் சார்ந்த சேவை போன்ற இணைய வேகத்தை வழங்குகிறது.
- இதன் மூலம், உள்நாட்டு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி SIM எதுவும் இல்லாத 5G சேவையினை வழங்கும் முதல் இந்திய இணையதள சேவை வழங்குநராக BSNL மாறுகிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## டிராவிடோகெக்கோ குன்னூர் - புதிய மரப் பல்லி வகை

- குன்னூரைச் சுற்றி மட்டுமே இருப்பதாக நம்பப்படும் ஒரு புதிய வகை மரப் பல்லி ஆனது, தமிழ்நாட்டின் நீலகிரியில் கண்டறியப்பட்டுள்ளது.
- மேற்குத் தொடர்ச்சி மலையின் மேல் மட்ட நீலகிரியின் குன்னூர் மலைகளில் உள்ள இந்தத் தனித்துவமான டிராவிடோகெக்கோ இனத்தின் ஒரு அதிகாரப் பூர்வப் பெயர்


டிராவிடோகெக்கோ குன்னூர் ஆகும்.

- இப்புதிய மரப் பல்லி வகை கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் மொத்த இனங்கள் தற்போது ஒன்பது ஆக உள்ளன.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## அணு ஆயுதம் குறித்த அறிக்கை 2025




- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) வருடாந்திர முக்கியத் தகவல் புத்தகம் ஆனது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- உலகளவில் சுமார் 12,241 அணு ஆயுதங்களும், இராணுவ இருப்புக்களில் ~9,614 அணு ஆயுதங்களும் உள்ளன.
- உலகளாவியப் போர் ஆயுதங்களில் சுமார் 90 சதவீதத்திற்கும் அதிகமானவற்றை ரஷ்யா (5,459) மற்றும் அமெரிக்கா (5,177) ஆகிய நாடுகள் கொண்டுள்ளன.
- 2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாத நிலவரப்படி, இந்தியாவில் 180 அணு ஆயுதங்கள் சேமிக்கப் பட்டுள்ளன.
- 2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாத நிலவரப்படி, பாகிஸ்தானின் அணு ஆயுத கையிருப்பு 170 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.
- சீனாவில் 600 அணு ஆயுதங்கள் உள்ளன என்பதோடு இது 2023 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டிற்கு ~100 என்ற அளவில் அதிகரித்து வருகிறது.
- உலகில் அணு ஆயுதம் கொண்ட ஒன்பது நாடுகள் - அமெரிக்கா, ரஷ்யா, ஐக்கியப்

பேரரசு, பிரான்சு, சீனா, இந்தியா, பாகிஸ்தான், வட கொரியா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் ஆகும்.

## அரசியலில் பெண்கள் 2025 உண்மைத் தகவல் அறிக்கை





- இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் அமைப்பால் வெளியிடப் பட்டது.
- 2025 ஆம் ஆண்டு ஜூன் 01 ஆம் தேதி நிலவரப்படி, 27 நாடுகளில் 31 பெண்கள் அரசு மற்றும் /அல்லது அரசாங்கத் தலைவர்களாகப் பணியாற்றுகின்றனர்.
- ஒற்றை அல்லது கீழ் அவைகளில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் 27.2 சதவீதம் பேர் மட்டுமே பெண்கள் ஆவர் என்ற நிலையில் இது 1995 ஆம் ஆண்டில் 11 சதவீதமாக இருந்தது.
- ஆறு நாடுகளில் மட்டுமே ஒற்றை அவை அல்லது கீழ் அவைகளில் 50 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.
- ருவாண்டா (64%), கியூபா (56%), நிகரகுவா (55%), அன்டோரா (50%), மெக்ஸிகோ (50%) மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (50%) ஆகிய நாடுகள் மிகச் சிறப்பான செயல்திறனைக் கொண்டுள்ளன.
- உள்ளாட்சிப் பிரதிநிதி அமைப்புகளில், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் சுமார் 3 மில்லியனுக்கும் அதிகமானோர் (35.5 சதவீதம்) பெண்கள் ஆவர்.
- இரண்டு நாடுகள் மட்டுமே அரசியலில் பெண்களின் பங்கேற்பில் 50 சதவீதத்தை எட்டி உள்ளது.

## உலகளாவிய வறட்சிக் கண்ணோட்டம் - 2025

- இந்த முக்கிய அறிக்கையானது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பினால் (OECD) வெளியிட்டுள்ளது.
- 1980 ஆம் ஆண்டிலிருந்து, உலகின் சுமார் 37% நிலப்பரப்பில் குறிப்பிடத்தக்க அளவில் மண்ணின் ஈரப்பதம் குறைந்துள்ளது.
- பருவநிலை மாற்றம் மற்றும் பல்வேறு மனிதச் செயல்பாடுகள் காரணமாக சமீபத்திய தசாப்தங்களில் புவியின் 40% பகுதியானது அடிக்கடி கடுமையான வறட்சியை எதிர் கொண்டுள்ளது.
- பருவநிலை மாற்றமானது 2022 ஆம் ஆண்டு ஐரோப்பிய வறட்சியை சுமார் 20 மடங்கு அதிகரிக்கச் செய்தது மற்றும் தற்போதைய வட அமெரிக்க வறட்சியை சுமார் 42%

அதிகரித்தது.

- இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற சில நாடுகள் நீர் மின் நிலையங்களின் பல செயல்பாடுகளில் நீர் சார்ந்த இடையூறுகளை எதிர்கொள்ள நேரிடும்.
- சராசரி வறட்சிப் பாதிப்பின் காரணமாக பொருளாதாரச் செலவினம் ஆண்டிற்கு 3% - 7.5% வரை அதிகரிக்கிறது.




# மாநிலச் செய்திகள்

## இராஜஸ்தானின் Cash Plus மாதிரியின் சாதனைகள்





- இராஜஸ்தானின் Cash Plus மாதிரி, புதிய குழந்தை பெற்றெடுத்தத் தாய்மார்களிடையே ஆரம்பகாலத் தாய்ப் பால் வழங்கல் விகிதத்தையும், பல்வேறு உணவு உட்கொள்ளும் தன்மையையும் அதிகரித்தது.
- இது நேரடிப் பலன் பரிமாற்றங்களை (DBT) நடத்தை மாற்றத்திற்கான தகவல் தொடர்பு உடன் இணைக்கும் இந்தியாவின் முதல் மாநில அரசின் சோதனைத் திட்டமாகும்.

- இந்தத் திட்டத்தின் மூலம் கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு, தாய் மற்றும் சேய் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து குறித்து, குடும்பம் சார்ந்த மற்றும் குழு ஊட்டச்சத்து ஆலோசனை வழங்கப்படுகிறது.
- ஒரு ஆய்வு அறிக்கையின்படி, 80% பெண்கள், மலிவு விலையிலான மற்றும் சத்தான உணவுக்கான அணுகல் மேம்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

# முக்கிய தினங்கள்

## உலக சிறுநீரப் புற்றுநோய் தினம் 2025 - ஜூன் 12

- இது உலகில் ஆண்டுதோறும் ஜூன் மாதத்தின் இரண்டாவது வியாழக்கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினமானது, இந்த நோயைப் பற்றிய உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக என சர்வதேச சிறுநீரகப் புற்றுநோய் கூட்டணியால் (IKCC) உருவாக்கப் பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Show your kidneys some love" என்பது ஆகும்.




## மோதல்களில் பாலியல் வன்முறையினை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் 2025 - ஜூன் 19





- மோதல்கள் அதிகம் நிகழும் மண்டலங்களில் பாலியல் வன்முறை தொடர்பான கடும்

பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக இத்தினமானது 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் நிறுவப்பட்டது.


- மோதல்களில் நிகழும் பாலியல் வன்முறையை அகற்ற வேண்டியதன் ஒரு அவசியம் மற்றும் அமைதி மற்றும் பாதுகாப்பில் அதன் பேரழிவுகரமான தாக்கம் குறித்து ஒரு உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Breaking the Cycle, Healing the Scars: Addressing the Intergenerational Effects of Conflict-Related Sexual Violence" என்பதாகும்.

## தேசிய வாசிப்பு தினம் 2025 - ஜூன் 19

- வாசிப்புப் பழக்கத்தையும் வாழ்நாள் முழுவதுமான கற்றலையும் ஊக்குவிப்பதற்காக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது புதுவையில் நாராயண பணிக்கர் அவர்களை (P.N. பணிக்கர்) கௌரவிக்கிறது.
- அவர் கேரளாவில் "நூலகம் மற்றும் எழுத்தறிவு இயக்கத்தின் தந்தை" என்று அழைக்கப் படுகிறார்.
- இந்தத் தினமானது, 2017 ஆம் ஆண்டில் நாட்டின் பிரதமரால் அதிகாரப் பூர்வமாகத் தேசிய அளவிலான அனுசரிப்பாக அறிவிக்கப்பட்டது.




## உலகப் பொழுதுபோக்கு நடை தினம் 2025 - ஜூன் 19





- இந்தத் தினமானது, மக்கள் தங்கள் வேலையில் இருந்து சற்று இடைவெளியை எடுத்து

சற்று மெதுவாக செயல்படுவதை நினைவூட்டுவதற்கானதாகும்.


- இந்த நாள் "சாண்டரிங்" என்ற சொல்லினால் குறிப்பிடப்படும் நிதானமாக நடக்கும் ஒரு பழக்கத்தினைப் பேணுமாறு அனைவரையும் ஊக்குவிக்கிறது.
- ஓட்டப் பயிற்சி (ஜாகிங்) பிரபலமடைந்து வருவதற்கு மறுமொழியாக, 1970 ஆம் ஆண்டு W.T. ரேப் அவர்களால் இத்தினம் உருவாக்கப்பட்டது.

## உலக அகதிகள் தினம் 2025 - ஜூன் 20

- அகதிகள் எதிர்கொள்ளும் சவால்களை முன்னிலைப் படுத்துவதையும், அவர்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்திற்கான ஒரு புரிதலையும் அதற்கான ஆதரவையும் ஊக்குவிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அகதிகளின் முதன்மையான நிலை தொடர்பான 1951 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் உடன்படிக்கையின் 50வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் 2001 ஆம் ஆண்டு ஜூன் 20 ஆம் தேதியன்று இந்தத் தினமானது முதன்முதலில் உலகளவில் அனுசரிக்கப் பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Solidarity with Refugees" என்பதாகும்.




## கோடைகாலச் சங்கராந்தி 2025 - ஜூன் 21





- பூமியின் வட துருவம் ஆனது சூரியனுக்கு மிக அருகில் சாய்ந்து காணப்படும் போது கோடைகாலச் சங்கிராந்தி ஏற்படுகிறது.

- ❖ இந்த நிலையில் சூரியன் வானத்தின அதன் மிக உயர்ந்த உச்ச நிலையை அடைகிறது.
- ❖ "சங்கராந்தி" என்ற ஒரு சொல்லானது, சூரியன் தனது திசையை மாற்றுவதற்கு முன்பு வானத்தில் அதன் இயக்கம் இடை நிறுத்தப்படும் புள்ளியைக் குறிக்கிறது.
- ❖ தோராயமாக 23.5 டிகிரி அளவில் சாய்ந்தப் புவியின் அச்சில், வடக்கு அரைக் கோளம் ஆனது அதன் நேரடி கோணத்தில் அதிக சூரிய ஒளியைப் பெறுகிறது.
- ❖ மேலும், குளிர்காலத்தில் நுழைகின்ற தெற்கு அரைக்கோளம், அதன் குறுகிய பகல் மற்றும் நீண்ட இரவை எதிர்கொள்கிறது.

## சர்வதேச யோகா தினம் 2025 - ஜூன் 21

- ❖ அன்றாட வாழ்வில் யோகா பயிற்சி செய்வதன் பல நன்மைகள் குறித்து உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- ❖ 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையானது இந்த ஒரு நாளை அதிகாரப் பூர்வமாக அறிவித்தது.
- ❖ வடக்கு அரைக்கோளத்தில் ஆண்டின் மிக நீண்ட நாளாக உள்ள இந்த ஜூன் 21 ஆம் தேதியானது சர்வதேச யோகா தினமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- ❖ 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Yoga for One Earth, One Health" என்பது ஆகும்.




## உலக நீர் நிலையியல் தினம் 2025 - ஜூன் 21

- ❖ இந்தத் தினமானது பெருங்கடல்கள், கடல்கள் மற்றும் ஆறுகள் போன்ற பல்வேறு நீர் நிலைகளின் புவியியல் அம்சங்களைப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை நன்கு வலியுறுத்துகிறது.
- ❖ இந்தத் தினமானது, நீர்நிலையியல் குறித்த உலகளாவியப் பெரும் விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக 2005 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் ஒரு அதிகாரப் பூர்வமாக நிறுவப்பட்டது.
- ❖ இத்தினமானது சர்வதேச நீர் நிலையிவியல் அமைப்பு (IHO) நிறுவப்பட்டதன் ஆண்டு நிறைவை நினைவு கூர்கிறது.
- ❖ பாதுகாப்பான வழிசெலுத்தல் மற்றும் பெருங்கடல் வளங்காப்பினை ஆதரிப்பதற்காக IHO ஆனது முதலில் 1921 ஆம் ஆண்டில் சர்வதேச நீர் நிலையியல் வாரியமாக நிறுவப்

பட்டது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Seabed Mapping: Enabling Ocean Action" என்பதாகும்.




## சர்வதேச ஒலிம்பிக் தினம் 2025 - ஜூன் 23




- இந்தத் தினமானது நவீன கால ஒலிம்பிக் போட்டிகளின் மீதான ஒரு தோற்றத்தினை நினைவு கூர்கிறது.
- இந்த நாள் முதன்முதலில் 1948 ஆம் ஆண்டில் கொண்டாடப் பட்டது.
- 1894 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் தேதியன்று சர்வதேச ஒலிம்பிக் குழு நிறுவப்பட்டதை நினைவு கூரும் விதமாக இத்தினம் நிறுவப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Let's Move?" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★